செ.வெ.எண்: 439 நாள்: 14.08.2021

**புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்**
**கொரோனா நோய் தொற்றால் பெற்றோரை இழந்த 19 குழந்தைகளுக்கு**
**ரூ.57 லட்சம் மதிப்பிலான நிவாரண நிதியுதவிகளை**
**மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட**
**அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சமூகப் பாதுகாப்புத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் கொரோனா நோய் தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு நிவாரண நிதியுதவி வழங்குதல் மற்றும் கோவிட் விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.08.2021) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் கோவிட் தொற்றால் பெற்றோர்களை இழந்த 19 குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ.57 லட்சம் மதிப்பிலான நிவாரண நிதியுதவிகள் மற்றும் கோவிட் விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கி, விழாப்பேருரையில் பேசியதாவது;

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பெற்றோர்களை இழந்த 18 வயதிற்குட்பட்டவர்கள் 69 குழந்தைகள் என கண்டறியப்பட்டதில் 2 பெண் குழந்தைகள் தாய் மற்றும் தந்தையை இழந்தவர்கள். மீதமுள்ள 67 குழந்தைகளில் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகள் ஆண் -34, பெண் -33 என கண்டறியப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதில் முதல்கட்டமாக பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த குழந்தைகளுக்கு அவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க 19

குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் மொத்தம் ரூ.57 லட்சம் மதிப்பில் நிவாரண உதவித் தொகை இன்று வழங்கப்பட்டுள்ளது.

ஏழை, எளிய பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ஆதரவாக இதுபோன்ற அரசு நிவாரண நிதியுதவிகளை வழங்குகிறார்கள்.

மேலும் கோவிட் தொற்றால் பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சமும், பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு தலா ரூ.5 லட்சமும் வழங்கப்படுவதுடன், குழந்தைகளின் படிப்பிற்கான செலவையும் தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டி, வினாடி வினாப் போட்டி, வாசகப் போட்டி, முழக்கம் எழுதுதல் போட்டி, சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி, குறும்படப் போட்டி, மீம் உருவாக்கும் போட்டி போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற 17 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பெட்ரோல் விலை ரூ.3 குறைக்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கடன்கள் ரத்து செய்யப்பட்டும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு புதிதாக கடனுதவி வழங்கப்படும் எனவும், சிட்கோ, சிப்காட் தொழிற்பேட்டைகளில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் எனவும், தகுதியுள்ள குடும்பத் தலைவிகள் கண்டறியப்பட்டு, உரிமைத் தொகை ரூ.1,000 வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், பொதுசுகாதாரத்துணை இயக்குநர் மரு.கலைவாணி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் குணசீலி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி.சத்தியமூர்த்தி மற்றும் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**